**தலைப்பு – 332 தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களிலிருந்தும் நிருபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்படுவார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 332 - தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 31 இல் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில்

விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு பின்வரும் குறிப்பில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| **நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றன என்பதுவும். | 1. சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.2 |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் | 1. சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தியமை | 2.2(அ) |
| | | 2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை. | 2.5 |

| | | | |
|---|---|---|---|
| | பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | | |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றமை என்பதும். | இணக்கமின்மை | 2.6 |
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு வருமதியான பணத்தை சேகரிப்பதில் செயன் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கை நாளாந்தம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பப்படுதல். | 1. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான அனுமதிக்கப்பட்ட ஆகக்கூடிய செலவின எல்லை. | 2.4 |

## 2. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 நிலைபேறான அபிவிருத்தி

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்காளாக சகலருக்குமான தண்ணீர், நிலைபேறான முகாமைத்துவம் மற்றும் சுகாதார பெறுகைகைகளை உறுதிப்படுத்தல் என்பனவாக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தாபனத்தால் எந்தவொரு உள்ளக சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள் மற்றும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருக்காததுடன் திணைக்களத்திலுள்ள உத்தியோகத்தர்கள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர்.

#### 2.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செத்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையை திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கை 2018 ஆகஸ்ட் 20 வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள் முகமைத்துவம்**

(அ) குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

2007 திசெம்பர் மாதத்தின் போது காட்சியறைகளிற்காக பெறப்பட்ட ஆறு (06) அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் பல்துறை அச்சிடல் இயந்திரங்கள் என்பன 2018 ஆகஸ்ட் 29 ஆன கணக்காய்வு திகதி வரையும் பொதியிடப்பட்டவாறே காட்சியறையில் பயனற்று இருந்தது.

(ஆ) பயன்படுத்தப்படாத வங்கி கணக்குகள்

2014 செத்தெம்பர் 22 ஆந் திகதிய 1881/6 ஆம் இலக்க இலங்கை சனநாய சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் கீழ் தேசிய சமுதாய நீர் வழங்கல் நம்பிக்கை பெறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் தேசிய சமுதாய நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சமுதாய நீர் வழங்கல் நம்பிக்கை பெறுப்பு நிதியத்தின் கணக்குப் பதிவேடுகளின் பிரகாரம், ரூபா 1,794,454 ஆன நிலையான வைப்புக் கணக்கு மற்றும் ரூபா 682,554 ஆன நடைமுறைக் கணக்கு என்பன பேணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது திணைக்களத்திற்கு மாற்றப்படாமல் அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் அத்திகதியிருந்து தற்போது வரை பயனற்று இருந்தது என அவதானிக்கப்பட்டது.

மேலும், கணக்காய்வு மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புக்கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கின் மீதிகள் முறையே ரூபா 2,326,495 மற்றும் ரூபா 837,323 ஆக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) செயற்திட்டங்களிற்கு சொந்தமான வாகங்களை பயன்படுத்தல்

லுணாவ சமுதாய அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் என்பவற்றிற்கு சொந்தமான பதின் மூன்று (13) வாகனங்கள் மீளாய்வாண்டின் போது தேசிய சமூதாய நீர் வழங்கல் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.3 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியினுள் மாவட்ட செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2015 | மீண்டெழுபவை | 44.9 | 39.8 | 5.1 | 11.4 |
| | மூலதனம் | 200.0 | 109.5 | 90.5 | 45.3 |
| | **மொத்தம்** | **244.9** | **149.3** | **95.6** | **39.0** |
| 2016 | மீண்டெழுபவை | 96.6 | 93.7 | 2.9 | 3.0 |
| | மூலதனம் | 122.2 | 89.7 | 32.5 | 26.6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மொத்தம்** | **218.8** | **183.4** | **35.4** | **16.2** |
| 2017 | மீண்டெழுபவை | 143.1 | 128.0 | 15.1 | 10.6 |
| | மூலதனம் | 104.3 | 103.1 | 1.2 | 1.2 |
| | **மொத்தம்** | **247.4** | **231.1** | **16.3** | **6.6** |

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

திணைக்களத்தின் உரிய 33201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறு.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.00 | 3.88 | 1.80 | 2.66 | 8.00 | 4.99 |

## 2.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 891 (1) ஆம் பிரிவின் பிரகாரம், பிணைமுறி வழங்க வேண்டுமென தேவைப்பட்ட சகல உத்தியோகத்தர்களின் பெயர்களை கொண்டுள்ள பிணைமுறி பதிவேடொன்று திணைக்களத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இதனை அவ்வாறு செய்வதற்கு தவறியிருந்தது.

## 2.6 இணக்கமின்மை

### 2.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பிரிவின் பிரகாரம், ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட கடன்களின் அறவீடு தொடர்ந்துவரும் மாதத்திலிருந்து அறவிடப்பட வேண்டியதுடன் மாதாந்த வட்டி உரியவாறு வழங்கப்பட்ட கடன் திகதியிலிருந்து சாட்டுதல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.7. மனிதவளங்கள் முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்கள் மீதான செலவினங்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன. திணைக்களம் மீளாய்வாண்டிற்கான ஆளணி வெதனங்களில் ரூபா 101 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்தது. இதன்படி, அண்ணளவாக ஒரு நபருக்கான மூலதனச் செலவினம் ரூபா 444,718 ஆக இருந்தது. பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

**(அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | **பதவியணியினர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் சதவீதம்** |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட நிலை | 28 | 09 | 19 | 68- |
| (ii) | மூன்றாம் நிலை | 340 | 137 | 203 | 60 |
| (iii) | இரண்டாம் நிலை | 41 | 28 | 13 | 32- |
| (iv) | ஆரம்ப நிலை | 70 | 53 | 17 | 24 |
| | **மொத்தம்** | **479** | **227** | **252** | **53** |

ஒவ்வொரு ஊழியர் வகுதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட பதவியணியின் 20 சதவீதத்தினை விட வெற்றிடங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. இது மொத்த அனுமதிக்கப்பட்ட பதவியணியின் 53 சதவீதமாக உயர்வாக இருந்தது.

## 2.8. அரச உத்தியோகத்தர்களின் பிணைவைப்பு

திணைக்களத்தில் பிணை வைப்பு வழங்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பான நிதிப் பிராணம் 880(1) இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

*M*